பேரூராட்சி அலுவலகம்
உண்ணாமலைக்கடை

ந.க.எண் : 178/ 2022 /அ1 நாள்: 23.06.2022

**ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்**

கன்னியாகுமரி மாவட்டம், உண்ணாமலைக்கடை முதல் நிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2021-2022 ன் கீழ் , கீழ்க்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் **12.7.2022** அன்று **பிற்பகல் 3.00 மணி** வரை **செயல்அலுவலர்** அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் 12.07.2022 அன்று **பிற்பகல் 3.30 மணிக்கு** வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். வேலைக்கான ஒப்பந்தபுள்ளி படிவங்கள் 11.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பிற்பகல் 5.00மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி **உண்ணாமலைக்கடை** பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலும் http://www.tenders.tn.gov.in/ , https://tntenders.gov.in இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்படி பணிகள் மற்றும் ஒப்பந்தபுள்ளி சம்பந்தமான விவரங்கள் , ஒப்பந்ததாரர் தகுதி விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவத்தின் விலை | **வேலை முடிக்கும் காலம்** |
|---|---|---|---|---|---|
| 1, | மின்கலன் மூலம் இயங்கும் 13 வாகனங்கள் (BOV) சப்ளை செய்தல் | 20.15 | 20150 | 6240/- | 30 நாட்கள் |

**நிபந்தனைகள்**

1. மின் கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக் குழுவில் மின்கலன் (Sealed Lead Acid)மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் மின்கலன் (Sealed Lead Acid) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.றறி(5 சதவீதம்) நீங்கலாக ரூ.1.55இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்பட வேண்டும்.

2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000இன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்
3. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல்ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.50/– மதிப்புள்ளமுத்திரை தாளில்ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும். பணி ஆணைவழங்கப்படும்போதுகூடுதல் 1% வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டும்
4. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச் சான்றிதழ் அளித்த பின்பே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.
5. உரிய காலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படும்
6. வாகனங்கள் வினியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தபத்திரத்தில் இடம் பெற வேண்டும்
7. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி மற்றும் சரக்கு சேவை வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்
8. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்
9. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும்போது விற்பனை வரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்
10. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணிஆணை வழங்கப்படும்போது கூடுதல் 1 % வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டும்
11. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கான பட்டியல் தொகை வழங்கப்படும்போது ஜி.எஸ்.டி 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்
12. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புத்தொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்

13. செலுத்தப்படும் வைப்புத்தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழுங்கப்படும்
14. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட நிறுவனங்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்
15. செலவினங்கள்திட்டநிதியிலிருந்துமானியம்கிடைக்கப்பெற்ற பின்னர் காசோலையாக வழங்கப்படும்.
16, மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் http://www.tenders.tn.gov.in/ , https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.
17. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
உண்ணாமலைக்கடைபேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்.

**பெறுநர்:**

1. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்
2. அலுவலக அறிவிப்பு பலகைக்கு

**நகல்:–**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, நாகர்கோவில்
4. இளநிலை பொறியாளர், உண்ணாமலைக்கடை பேரூராட்சி, தலைமையிடம்
5. அலுவலக விளம்பரப் பலகைக்கு.